**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 459/2024**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அன்னலட்சுமி | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சீனிசிதம்பரம் | தொழில் | : | உதவி ஆய்வாளர் |
| கிராமம் | : | வீரசிகாமணி | வயது | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 09th, 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்ட பொருளாதார குற்றப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் இதற்கு முன்பு ஆழ்வார்க்குறிச்சி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 02.04.2023ம் தேதி நிலைய பொறுப்பில் இருந்தபோது, தென்காசி அரசு மருத்துவமனையிலிருந்து கிடைத்த தகவலின் படி, மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ஈஸ்வரன் மனைவி மகேஸ்வரி என்பவர் கொடுத்த புகார்வாக்குமூலத்தை 18.30 மணிக்கு பதிவு செய்து, நிலையம் 19.00 மணிக்கு வந்து அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.54/2023, சட்டப்பிரிவுகள் 294(பி), 307, 506(2) இதசவின் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை அம்பாசமுத்திரம் நீதித்துறை நடுவர் நீதீமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகும். மகேஸ்வரி புகார் வாக்குமூலம்

கொடுக்கும்போது அவரது தலைமுடி ஒட்டியுள்ள இரத்தக்கறை படிந்த சிவப்பு கலரில் உள்ள வெள்ளை மற்றும் கருப்பு நிற கோடு போட்ட துண்டு ஒன்றை என்னிடம் ஆஜர்படுத்தியதை நான் காவல் ஆய்வாளர் விசாரணைக்கு வைத்தேன். தலைமுடி ஒட்டியுள்ள இரத்தக்கறை படிந்த சிவப்பு கலரில் உள்ள வெள்ளை மற்றும் கருப்பு நிற கோடு போட்ட துண்டு ஒன்று – **அ.சா.பொ.2** ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** –

புகார்தாரர் மருத்துவமனையில் எந்த வார்டில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் வார்டு பற்றி நான் குறிப்பிடவில்லை. தற்போது அது எனக்கு ஞாபகமில்லை. புகார் வாக்குமூலம் பெறும்போது, அவர் சுயநினைவுடன் தான் இருந்தார். நான் வாக்குமூலம் பெறும்போது மருத்துவ அலுவலர்கள் இருந்தார்களா? என்றால் எனக்கு ஞாபகமில்லை. தலைமுடி ஒட்டியுள்ள இரத்தக்கறை படிந்த துண்டை காயம்பட்டவர் எங்கிருந்து எடுத்து தந்தார் என்றால் அவருடைய அருகில் இருந்தது, அதனை எடுத்து தந்தார். அந்த பொருளை எவ்வாறு பாதுகாப்பாக நான் எடுத்து சென்றேன் என்று ஆய்வாளர் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. புகார்தாரரின் உடைகளில் இரத்தக்கறை இருந்ததை நான் பார்க்கவில்லை என்றால் நான் பார்க்கவில்லை. நான் சொன்ன நேரத்தில் புகார்தாரரிடமிருந்து எந்த புகார் வாக்குமூலமும் பெறவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. ஆவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.10 13:12:06 +0530